புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கவிஞர் மு. மேத்தாவின் திருவிழாவில் ஒரு தெருப்பாடகன் கவிதை உணர்த்தும் சமுதாயச் சிந்தனைகள்

க. நித்யா,
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
உதவிப் பேராசிரியர்,
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், நாமக்கல் – 637205. தமிழ்நாடு, இந்தியா.

## ஆய்வுச் சுருக்கம்

பழம்பெருமை வாய்ந்த மொழிகளின் பட்டியலில் ஒன்றான தமிழ்மொழி கால வெள்ளத்தில் அழிந்திடாது, மாறி வரும் மாற்றங்களுக்கு ஏற்ப தன்னையும் மாற்றிக்கொண்டு வளரும் ஆற்றலைப் பெற்றுள்ளது. புகழ்மொழியை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்த இலக்கிய வகைமைகளுக்கு நடுவே மக்களின் பிரச்சனைகளை நேரடியாகச் சுட்டி, விமர்சனம் செய்யும் புதிய வீரியமிக்கதாக நடைபோட்டு வரும் இக்கால இலக்கியம் இலக்கியவாதிகள் மட்டும் அல்லாமல் பல்துறை வல்லுநர்களாலும் போற்றத்தக்கப் பெருமைக்குரியது. அதில் குறிப்பிடத்தக்க இடத்தைப்பெற்ற புதுக்கவிதை சொல்வதை நறுக்குத் தெறித்தாற்போல சொல்லும் வலிமையைப் பெற்றுள்ளது. அவ்வலிமைக் கொண்ட கவிஞர்களின் வரிசையில் ஒருவராகத் திகழும் மு. மேத்தா மக்கள் கவிஞனாக இருந்து மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க புதுக்கவிதையை ஒரு கருவியாகப் பயன்படுத்தி புதுமையைப் புகுத்துவதோடு மக்கள் அடைந்துவரும் இன்னல்கள் நீங்கி, தமிழ்ப்பற்று, நாட்டுப்பற்று, பண்பாடு, சமுதாயம், வாழ்வியல் போன்றவற்றை எடுத்துரைக்கும் அவர்களது வாழ்வு மறுமலர்ச்சி பெறவேண்டும் என்ற பொறுப்புணர்வுடன் கவிதையைப் படைத்திருப்பதை அறியமுடிகிறது.

## முன்னுரை

தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்ற முப்பகுப்புகளைக் கொண்ட பெருமை வாய்ந்த மொழியாகும். காலத்தை வென்று நிற்கக் கூடிய இலக்கிய, இலக்கணங்களையும் தன்னகத்தே பெற்ற சிறப்பினையும் இம்மொழி கொண்டு விளங்குகின்றது.

சங்ககாலந் தொடங்கி இக்கால இலக்கியங்கள் என்று எண்ணற்ற படைப்புகள் தோற்றம் பெற்று வருகின்றன. அவை ஒவ்வொன்றும் தோன்றும் காலத்திற்கேற்ற மாற்றங்களையும் மரபுகளையும் பதிய வைக்கின்றன. அந்த வகையில் இக்கால இலக்கிய வரிசையில் கவிதை, சிறுகதை, புதினம் போன்ற இலக்கிய வகைமைகளைக் கூறலாம். அவற்றில் குறிப்பிடத்தக்கதாக புதுக்கவிதை விளங்குகின்றது. நாட்டில் நிலவும் அரசியல், சமூகப் பொருளாதார நிலை, மக்களின் பண்பாட்டு மரபுகள், வாழ்வியல் முறைகள், சமுதாய அமைப்பு, மக்களின் அவலங்கள், உழைக்கும் மக்களின் போராட்டங்கள் என அனைத்தையும் தமது படைப்புகளின் மூலம் புதுக்கவிஞர்கள் படம்பிடித்துக் காட்டுகின்றனர். அவ்வரிசையில் மு. மேத்தாவும் ஒருவராகக் கருதப்படுகின்றார். அவரது திருவிழாவில் ஒரு தெருப்பாடகன் என்னும் கவிதை உணர்த்தும் சமுதாயச் சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## தமிழும் தமிழரும்

உலக மொழிக்கெல்லாம் தலைமை மொழியாக விளக்குவது தமிழாகும். மூத்தகுடி தமிழ்க்குடி என்றும் ஆதிமொழி தமிழ் என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் வியப்புறும் வகையில்

*தொன்மை வாய்ந்தது மட்டுமின்றி பார்புகழும் அறிவும் ஆற்றலும் பெற்ற ஒரே இனம் தமிழினம் எனவும் கூறலாம். இத்துணைப் புகழ்மிக்கத தமிழும் வீரமும் விவேகமும் கொண்ட தமிழரை இழிவுபடுத்தும் செயல் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இது கண்டிக்கத்தக்கது என மு. மேத்தா குரல் கொடுக்கின்றார்.*

*மூவேந்தர்கள் மட்டுமின்றி குறுநில மன்னர்கள் காலத்திலும் தமிழும் தமிழ்ப் புலவர்களும் மதிக்கப்பட்டனர். ஆனால், இன்றைய நிலையில் அந்நியமொழி பேசுவதில் தான் பெருமை இருப்பதாகக் கருதும் நிலை உருவாகி வருவதாக கவிஞர் கூறுகின்றார். இதனை,*

*அன்று*
*தலை கொடுக்க*
*வந்தானாம்*
*தமிழுக்கு!*
*இன்றைக்கோ*
*நல்ல விலைகொடுக்க யாரேனும்*
*வந்தால்*
*தமிழை விற்பதற்குத்*
*தயங்கவே மாட்டார்கள்!*
*சிலபேர்*
*தாமதம் செய்வதுகூட*
*தயக்கத்தால் அல்ல*
*நல்ல விலை கிடைக்காதா*
*என்ற*
*நப்பாசையாலே தான்! (திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், பக்.16)*

*என்றமையும் வரிகளால் உணரலாம். வள்ளலாகப் போற்றப்படும் குமணன் தமிழுக்குத் தொண்டு செய்வதும் தாய்நாட்டைக் காப்பதும் தன் தலையாயக் கடமை என்று போற்றினான். ஆனால், இன்றைய ஆட்சியாளர்கள் ஆங்கிலம், இந்தி என்று அந்நிய மொழிகளைக் கற்பதற்கு முக்கியத்துவம் நல்கும் நிலையை உணரலாம்.*

*இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்கு*
*இன்பந்த தரும்படி வாய்த்தநல் அமுது*

*(பாரதிதாசன் கவிதைகள்.ப.82)*

*என்று பாரதிதாசன் தமிழ்மொழி அனைத்து வகை மக்களினமும் பேசுவதற்கு இனிமையானது என விளக்கம் தருகின்றார்.*

*இந்தியத் திருநாடு வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடு என்பதில் ஐயமில்லை. ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றான பத்திரிகைகள் தமிழைக் கொச்சைப்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிடுவது அவமானமாகும்.*

*பாருங்கள் எங்கள்*
*பத்திரிகைகளை*
*மாமன் கை மல்லிகைப் பூச்*
*செண்டான தமிழை – அது*
*காமன் கை அம்பாகக்*
*கலர் மாற்றம் செய்கிறது*
*தருமமிகு பத்திரிகைத்*
*தம்பிரான்கள் ஏனிந்த*
*கருமத்தைச் செய்தார்*

*(திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், பக்.18,19)*

*என்றமையும் கவிதைத் தொடர்கள் விளக்கம் தருகின்றன. தாய்மொழியை வளர்க்கும் நோக்கம் இன்றி வியாபாரம் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு தமிழை இழிவுபடுத்தும் நிலையை இதன் வழி உணர்த்துகிறார்.*

*தமிழ்*
*தமிழரால் நிந்திக்கப்பட*
*நடைபெற வேண்டியிருப்பது*

*பெயர்மாற்றம் மட்டுமல்ல*
*தமிழ் உணர்வு எனும்*
*உயிர் மாற்றம்! (காகித மரங்கள், பக்.53)*

*என்ற வரிகள் மூலம் தமிழராய் பிறந்த ஒவ்வொருவரும் தாய்மொழியில் பேசுவதே சிறப்பு என்ற எண்ணத்தோடு வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன.*

*உலக இன வரைவியலில் மூத்தகுடி என்னும் சிறப்பிற்கு உரியவர்கள் தமிழர்கள். தமிழனாய்ப் பிறந்ததனில் வாழ்வு செழுமை நீங்கிக் காணப்படுவது வருத்ததிற்குரியது என கவிஞர் ஆதங்கம் கொள்கின்றார்.*

*சுகராகம் இசைமேகம்*
*உருவாகும் நேரம்*
*சொர்க்கத்தின் வீதிகளில்*
*கண்ணீரின் ஈரம்*
*கதைகள் சுவையானது*
*இங்கே*
*வாழ்க்கை சுவையானது.*
*(திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், பக்.13)*

*என்ற வரிகளால் தெளிவுப்படுத்துகின்றார். மானிடப் பிறவியில் சுமையும் ஒரு பகுதி அது தமிழர்களுக்கு மட்டும் அமைந்துள்ளது என்பதையும் அவர்களின் வாழ்வியல் முறைகளையும் படம்பிடித்துக் காட்டுகின்றனர்.*

*பெண்களும் சமுதாயமும்*

*ஆண் படைப்பினை விடவும் பெண் பிறவியே புதுமையும் அற்புதத் தன்மையும் நிறைந்தது என்பர். ஏனெனில் ஓர் உயிரில் மற்றொரு உயிரைத்தாங்கி ஈன்றெடுக்கும் பணியைப் போற்றாதோர் எவருமில்லை. அச்சிறப்புமிக்கவர்களைச் ச்முதாயம் பல நிலைகளில் அடிமைப்படுத்தி வருவதும் ஏற்றுக் கொள்ள முடியாத செயலாகும்.*

*சமூகம் கற்பிக்கும் பண்பாடுகள் அதன் அடிப்படையிலான நடத்தைகள் ஆண், பெண்களை வேறுபடுத்திக் காட்டுகின்றன, இதனை,*

*பெண் என்பவள் பிறக்கப்படுவதில்லை*
*உருவாக்கப்படுகின்றாள் ( Beauvior.simondo, The sex, p -295)*

*என்று பிரெஞ்சுப் பெண்ணிய அறிஞர் சமன் –டி-பௌவாயர் தெளிவாக்குகின்றார். அதாவது சமூகம் வகுத்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் பெண்ணானவள் உருவாக்கம் செய்யப்படுகின்றாள் சிந்தனைத் தெளிவுப்படுத்துகிறார்.*

*கழுத்தில் அணிந்து அழகு பார்க்கும் அணிகலன்கள் போன்று எங்களை மதிக்காமல் காலனிகளுக்கு உண்டான மரியாதைக் கூட கிடைப்பதில்லை என பெண் சமுதாயம் ஏங்கும் நிலையைத் எடுத்துக்காட்டியுள்ளார்.*

*“நீ*
*எங்களைக்*
*கழுத்தில் அணியாமல்*
*காலில் அணிகின்றாய்*
*உன்னுடைய*
*சட்டாம்பிள்ளைத் தனத்தைச்*
*சகிக்க முடியாமல்தான்*
*இந்தப் பட்டாம் பூச்சி*
*வெளியே*
*பறக்கத் துடிக்கின்றது! (திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், பக்.82,83)*

*என்ற வரிகள் அடிமைகொள்ளும் ஆண் சமுதாயத்திலிருந்து விடுபட்டு சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் என பெண்ணிமை ஏங்கும் நிலையை எடுத்தியம்புகின்றன. மேலும்,*

*மூச்சு விடுவதற்கும்*
*உன் அனுமதி*
*முக்கியமாய் வேண்மென்றால்*

*இவ்வீட்டில்*
*சுதந்திரத்தில் எமக்கென்ன*
*சொந்தம் இருக்கிறது*
*பாசத்தில் ஒட்டாமல்*
*பசை போட்டா*
*ஒட்டுவது. (திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், பக்.86)*

*என்னும் தொடர்கள் ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் குடும்ப வாழ்வில் இருவருக்கும் சம உரிமைகள் இருந்தால்தான் வாழ்வு சிறக்கும். ஆனால், பெண்கள் சிலர் வீட்டிலும் அடிமைப்படுத்தப்படுவதனை விளக்குகின்றன. பெண்ணடிமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்ற சிந்தனையை அறிந்துகொள்ள முடிகின்றது.*

*பெண்ணானவள் தன் பிறப்பையும் சமூகத்தால் வஞ்சிக்கப்படுவதையும் எண்ணி மனம் வருந்தும் நிலையை,*

*வயிற்றினிலே அறியாமல்*
*வாரிசாய் வளர்ந்துவிட்டேன்*
*பெண்பூவாய்ப் பூத்ததென் தவறா? (இந்தச் சிப்பிக்குள், பக்.104)*

*என்ற வரிகள் விளக்குகின்றன.*

*குடும்பத்தில் பல இன்னல்களுக்கு ஆளாகும் அதே வேளையில் வரதட்சணைக் கொடுமையால் பெண்கள் தங்கள் இன்னுயிரை மாய்த்துக் கொள்கின்றனர்.சில நேரங்களில் கணவன்களால் கைவிடப்படும் தனி மரமாக வாழும் சூழலும் ஏற்படுவது அவமானத்திற்குரியதாகும். இதனை,*

*வரதட்ணை பாக்கிகள்*
*வந்து சேரவில்லை என்று*
*கணவன் மார்கள்*
*கடுங்கோபத்தோடு*
*வீதியில் தூக்கி*
*வீசி எறிகிறார்கள்*
*நகைகளல்ல*
*மனைவியை! (திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், பக்.86)*

*என்னும் கவிதை வரிகள் உனர்த்துகின்றன. ஆணும் பெண்ணும் சமம் என்பது வெறும் பொய்மை என்பதைச் சமுதாயத்திற்கு படம்பிடித்துக்காட்டுவதை அறியமுடிகின்றது.*

*திருமணங்கள் சொர்க்கத்தில்*
*நிச்சயிக்கப்படமாட்டா*
*திருமணங்கள் சொர்க்கத்தை*
*நிச்சயிக்கும்*
*மணம் என்றால் பணம் கேட்கும். (நேயர் விருப்பம். பக்.62)*

*என்ற அப்துல் ரகுமானின் வைர வரிகள் திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதற்குப் பதில், பணம், பொன் பொருட்களால் நிச்சக்கப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். வரதட்சணை இல்லையென்றால் ஒரு பெண்ணிற்கு வாழ்க்கை இல்லை என்பதை உணர்த்துகின்றார்.*

*வாழ்வும் வறுமையும்*

*மனித வாழ்வில் தேடலும் உழைப்பும் அவசியமானதாகும். இதில் எது குறைந்தாலும் வறுமை என்ற பிணி ஒட்டிக் கொள்ளும். சில நேரங்களில் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காததும் காரணமாகக் கொள்ளலாம். பஞ்சம், பசி, பட்டினி என்று மண்ணில் மாய்ந்த உயிர்கள் பல கோடிகளாகும்.*

*ஆடுநனி மறந்த கோடு உயர் அடுப்பின்*
*ஆம்பி பூம்பத் தேம்பசி உழவாப்*
*பாஅல் இன்மயில் தோலொடு திரங்கி*
*கல்வி துறந்த பொல்லா வறுமுலை*
*நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண் என்*
*மனையோம் எவ்வம் நோக்கி (புறம் : 164)*

என்ற புறநானூற்றுத் தொடர்கள் பல நாட்கள் உணவு சமைக்காததால் அடுப்பில் காளான் முளைத்தும் சத்தான உணவில்லாமல் பச்சிளம் குழந்தைக்குப் பால்கூட புகட்ட முடியாத ஒரு ஏழையின் நிலையை எடுத்துக்காட்டுகின்றன. இது போன்ற அவலம் மறைந்து ஏழ்மை ஒழிக்கப்படவேண்டும் என ஆசிரியர் தம் எண்ணங்களைப் பதிவிடுகின்றார்.

முற்றத்தில் கிடந்து
முனகும் ஏழையின்
முகம் பார்க்காமல்
மூன்று கண்களையும்
மூடிக் கொண்டிருந்த
அடுப்புக்குள்
இதுவரை இருந்தது
இருண்ட காலமே! (திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், பக்.34)

என்ற கவிதைத் தொடர்கள் ஏழைகளின் வீட்டில் உணவு சமைப்பதற்குத் தேவையானப் பொருட்கள் இன்றி அடுப்பு எரியாமல் காணப்படும் அவலநிலையைக் குறிப்பிடுகின்றன. அவர்கள் வாழ்வில் எப்போதும் இருண்ட காலமாகவே உள்ளதைப் படம்பிடித்துக்காட்டும் கவிஞரின் சிந்தனையை அறியலாம்.

அலங்காரத் தோரணங்கள், வீதி விளக்குகள் அனைத்தும் அந்தந்த நேரங்களில் ஒளிர்கின்றன. ஆனால், வயிற்றுப் பசியை அணைக்கும் அடுப்பு மட்டும் எரியவில்லை என கவிஞர் உள்ளம் குமுறுகின்றார். இதற்கு,

அலங்கார விளக்குகள்
வீதிகளில் போட்டாச்சு
அடுப்பு விளக்கோ
அணைந்து வெகுநாளாச்சு (திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், பக்.65)

என்னும் வரிகள் சான்று காட்டுகின்றன. வறுமை மக்களின் சாபக்கேடா? என சமுதாயப்பற்றோடு கேள்வி எழும் நிலையை உணரலாம்.

அண்டார்டிகாவின் அடிக்கோட்டை
கடந்த பாரதம் இன்னும்
வறுமைக் கோட்டை மட்டும்
கடக்காமல் இருக்கின்றது. (புதுக்கவிதையில் மனிதம், பக்.46)

மேற்கண்ட வரிகள் அறிவியல் வளர்ச்சியில் தன்னிறைவுப் பெற்ற பாரதம் வறுமை ஒழிப்பில் முதன்மை பெறவில்லை என்பதை எடுத்துரைக்கின்றன. மேலும்,

இல்லாமை என்கிற
இரும்புத் தணைகளால்
பூட்டிய அடுப்பை
மூட்டிய அடுப்பாக்க
முன்னேறிக் கொண்டிருக்கும்
வெற்றிப் படைகளாம்
விறகுகள் வாழ்க. (திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், பக்.35)

என்ற கவிஞரின் வரிகள் நாட்டில் வறுமை நீங்கி ஏழைகள் வாழ்வு பெற அரசாங்கத்தால் நல்ல திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்ற தொலைநோக்குச் சிந்தனையை அறியலாம்.

முடிவுரை

தாய்நாடும் தாய்மொழியும் மண்ணில் வாழும் மனிதர்களின் அடையாளங்களில் ஒன்றாகும். ஆதலால் ஒவ்வொருவரும் பற்றுடன் வாழ்வது அவரது கடமையாகக் கொள்ளவேண்டும். ஆண், பெண் இணைந்து வாழும் சமுதாயத்தில் பெண்கள் மட்டும் துன்பத்தில் உழன்று வரதட்சணை போன்ற கொடுமைகளில் இருந்து சுதந்திரம் பெற வேண்டும் என்பதையும் பதிவுசெய்கின்றார். அறிவியல் வளர்ச்சியில் தன்னிறைவுப் பெற்றாலும் வறுமை இன்றும் நாட்டில் ஒழிந்தபாடில்லை. அதனைப் போக்க அரசு புதிய முயற்சிகளைக் கையாள வேண்டும் என்ற சமுதாய அக்கறை கொண்ட கவிஞர் இவர் என்பதை அறியமுடிகிறது.

*பார்வை நூல்கள்*

*1. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1993.*

*2. மு. மேத்தா, திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், குமரன் பதிப்பகம், சென்னை, 2009.*

*3. பா. விஜய், காகித மரங்கள், குமரன் பதிப்பகம், சென்னை, 2007.*

*4. அப்துல் ரகுமான், நேயர் விருப்பம், நேஷனல் பப்ளிகேஷன்ஸ், சென்னை,1985.*

*5. இரா. இளங்குமரன், புறநானூறு உரை, கோவிலூர் மடாலயம் வெளியீடு, கோவிலூர், 2003.*

*6. ச. அந்தோணி டேவிட்நாதன், புதுக்கவிதையில் மனிதம், செரூபி பதிப்பகம், ஜெயங்கொண்டம், 2002.*

*7. பா. விஜய், இந்தச் சிப்பிக்குள், குமரன் பதிப்பகம், சென்னை, 2005.*

*ஆங்கில நூல்*

*1. Beauvior, Simonodo, The Second Sex, Piccadar Classics Great, Brittan,1963.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********